தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை

தை 11, விய – திருவள்ளுவர் ஆண்டு 2038
2007 ஜனவரி 25, வியாழக்கிழமை

மாண்புமிகு பேரவைத் தலைவர் **திரு. இரா. ஆவுடையப்பன்** *அவர்கள் தலைமையில் காலை 9–30 மணியளவில் பேரவை கூடியது.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்:

"ஒன்றா உலகத் துயர்ந்த புகழல்லாற்
பொன்றாது நிற்பதொன் றில்"

ஒப்பற்றதாகவும் அழிவில்லாததாகவும் இந்த உலகத்தில் நிலைத்திருப்பது புகழைத் தவிர வேறு எதுவுமே இல்லை. (குறுக்கீடுகள்)

(கறுப்பு ஆடை அணிந்து அவைக்கு வந்திருந்த அனைத்திந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழக உறுப்பினர்கள் எழுந்து நின்றுகொண்டு கோஷமிடத் தொடங்கினர்.)

(கறுப்பு ஆடை அணிந்து அவைக்கு வந்திருந்த மறுமலர்ச்சி திராவிட முன்னேற்றக் கழக உறுப்பினர்கள் இருக்கையிலிருந்து எழுந்து நின்றனர்.)

மாண்புமிகு பேரவைத் தலைவர்: எல்லோரும் அமைதியாக உட்காருங்கள். (குறுக்கீடுகள்) அமைதியாக உட்காருங்கள், எல்லோரும். (குறுக்கீடுகள்) ரொம்ப அழகாக இருக்கிறது. உட்காருங்கள். உட்காருங்கள் எல்லோரும். (கூச்சல்–குழப்பம்) உட்காருங்கள், நீங்கள் அவை நடவடிக்கைகளுக்கு இடையூறு பண்ணுகிறீர்கள், உட்காருங்கள். (குறுக்கீடுகள்) எல்லோரும் உட்காருங்கள். (குறுக்கீடுகள்) எல்லோரும் உட்காருங்கள். (குறுக்கீடுகள்) முதலில் உட்காருங்கள். (கூச்சல்–குழப்பம்) அவை நடவடிக்கைகளுக்கு இடையூறு பண்ணுகிறீர்கள். (கூச்சல்–குழப்பம்) நீங்கள் அவை நடவடிக்கைகளுக்கு இடையூறு பண்ணுகிறீர்கள்.

[2007 ஜனவரி 25

(அனைத்திந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழகத்தைச் சார்ந்த உறுப்பினர்கள் கோஷமிட்டுக்கொண்டே வெளியேறினர்.)

(மறுமலர்ச்சி திராவிட முன்னேற்றக் கழக உறுப்பினர்களும் அவையிலிருந்து வெளியேறினர்.)

(அனைத்திந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழகத்தைச் சார்ந்த உறுப்பினர்கள் திரு. பி.கே. சேகர்பாபு, திரு. கோ. அரி, திரு. கே.எஸ். விஜயகுமார், திரு. வே. செந்தில் பாலாஜி, திரு. ல. ராதாகிருஷ்ணன், திரு. சு.ப. வேலுமணி ஆகியோர் மட்டும் வெளியேறாமல் தொடர்ந்து அவையில் நின்று கொண்டு கோஷமிட்டுக் கொண்டிருந்தனர்.)

அழகாக இருக்கிறது, அழகாக இருக்கிறது. (கூச்சல்—குழப்பம்) அவைக் காவலர்கள், (கூச்சல்—குழப்பம்) அவைக் காவலர்கள், (கூச்சல்—குழப்பம்) திரு. பி.கே. சேகர்பாபு, திரு. கோ. அரி, திரு. கே.எஸ். விஜயகுமார், திரு. வே. செந்தில் பாலாஜி, திரு. ல. ராதாகிருஷ்ணன், திரு. சு.ப. வேலுமணி ஆகியோரின் பெயர்களை note பண்ணிக்கொள்ளுங்கள். (குறுக்கீடுகள்) இந்த ஆறு உறுப்பினர்களின் பெயர்களையும் note பண்ணிக்கொள்ளுங்கள். இந்த ஆறு உறுப்பினர்களின் பெயர்களையும் note செய்துகொண்டு, அவர்கள் அனைவரையும் வெளியேற்றுங்கள். போங்கள், போங்கள். அந்த ஆறு உறுப்பினர்களின் பெயரை மட்டும் note பண்ணிக்கொண்டு வெளியேற்றுங்கள் (குறுக்கீடுகள்) போங்கள், போங்கள் ரொம்ப அழகாக இருக்கிறது.

(அனைத்திந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழகத்தைச் சார்ந்த உறுப்பினர்கள் திரு. பி.கே. சேகர்பாபு, திரு. கோ. அரி, திரு. கே.எஸ். விஜயகுமார், திரு. வே. செந்தில் பாலாஜி, திரு. ல. ராதாகிருஷ்ணன், திரு. சு.ப. வேலுமணி ஆகியோர் பேரவைக் காவலர்களால் அவையிலிருந்து வெளியேற்றப்பட்டனர்.)

1. வினாக்கள்—விடைகள்

உடுக்குறியிட்ட வினாக்கள்

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வினாக்கள்—விடைகள். வினா எண் 31, திரு. ஆர். சாமி, மாண்புமிகு பொதுப் பணித் துறை அமைச்சர்.